[23rd September 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) Does not arise.

SRI S. M. ANNAMALAI : மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறார்களே அதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று. அப்படியிருக்கும்பொழுது இந்த மாநில அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு அந்தப் பதில் கொண்டு வரப்பட்டாதா ? என் மத்திய சர்க்காரிடம் இது விஷயமாக அணுகக் கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அமைச்சர்கள் மகாநாடு ஒன்றில் இந்த யோசனை கூறப்பட்டது. இதற்காக ஒருகமிட்டி அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியாருடைய சிபார்சு இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்த பிறகு அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

Food plant—Multi-purpose

* 1787 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) where and when the multi-purpose Food Plant is to be located under the Third Five-Year Plan; and

(*b*) the amount that would be spent during the current year in respect of this Scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Under a scheme sponsored by the Central Government, the State Government had a proposal to set up a pilot plant in the public sector for the manufacture of high protein food, viz., edible groundnut flour, with the machinery and equipment to be supplied by the UNICEF on loan. It has subsequently been proposed that the pilot plant should be installed in the private sector. The machinery to be supplied by the UNICEF will be installed in a private oil mill and the cost of the machinery will be recovered with interest, in 10 annual instalments. The Government of India have not yet finalised the terms and conditions under which the scheme will be implemented.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் தொழிற்சாலையை எங்கே நிறுவுவதாக இருக்கிறார்கள் ? இதைத் தனியார் துறைக்குக் கொடுக்க வேண்டிய காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைக் கோவையிலே நிறுவுவதாக இருக்கிறது. இதை பப்ளிக் செக்டாரில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. தனியார் துறையிலே இதை நடத்தலாம் என்று மத்திய அரசாங்கமும் முடிவு செய்து, இது அவ்வாறு தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : " மல்டி பர்பஸ் புட் " என்ற முறையிலே தயாரிக்கப்படுகிற உணவு பெரும்பகுதி மணிலாவை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்படுவதினால், மணிலா அதிகமாக உற்பத்தியாகிற தென்னாற்காடு மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மணிலா கோவை மாவட்டத்திலும் உற்பத்தியாகிறது.